# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com





# தேவன் பெரிதாய் மகிமைப்படுவார்!

## சகல தேசங்களின் சகல ஜனங்களும் 2016ம் ஆண்டில் முடிவில்லாத வல்லமைமூலம் இரட்சிப்புக்குள் வழிநடத்தப்படுவர்

"உலகமெங்கிலும் உள்ள 10,000 கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகளே, போதகர்களே, கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளே, இந்த 2016 ஆம் ஆண்டில் நீங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் ஒளியாகவும் உப்பாகவும் உங்கள் கடமைகளை நிறைவேற்றி, கிறிஸ்துவின் நறுமணத்தை வீசச் செய்து, ஒளியின் கனிகளை விளைவித்து தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என ஆண்டவருடைய நாமத்தில் நான் ஜெபிக்கிறேன்."

டிசம்பர் 27, 2015ல், மான்மின் மத்திய திருச் சபையின் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ ஆண்டு நிறைவு பொதுகூடுகையில் சபையின் 2016ஆம் ஆண்டின் நான்கு தரிசனங்களை அறிவித்தார். தேவன் அங்கத்தினர்களுக்கு ஒவ்வொரு வருடமும் புதிய தரிசனங்களைத் தருகிறார். அவர்களும் அவைகளுக்காக தினசரி இரவு நடைபெறும் தானியேல் ஜெபக்கூட்டத்தில் ஜெபிக்கின்றனர்.

### ❖ முதலாவது தரிசனம், ஒளியின் கனிகளாக விளைகின்ற அங்கத்தினர்களால் நிறைந்திருக்கும் "பிதா நேசிக்கும் சபை" (எபேசியர் 5:9)

ஒளியாகிய தேவனால் நேசிக்கப்படும் சபை ஒளியின் கனிகளாக விளைந்த அவருடைய பிள்ளைகளால் நிறைந்திருக்கும். மான்மின் அங்கத்தினர்கள் தேவனுடைய அநாதி தீர்மானத்தில் மேய்ப்பரின் தியாகத்தினால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒளியாக இருக்கிற ஆண்டவருடைய இருதயத்தின் சாயலை அடையப்பெற முயற்சிக்கின்றனர். ஒளியின் கனியாக மாற நீங்கள் சகல நற்குணத்தையும், நீதியையும், உண்மையையும் நிறைவேற்றி இருக்க வேண்டும்.

சகல நற்குணத்தின் கனியை அடைவதற்கு நீங்கள் தீமையை வெறுக்க வேண்டும். தீமையின் அனைத்து தோற்றங்களையும் களைந்துப்போட வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது; நீங்கள் நற்குணத்தை முழுவீச்சில் செயல்படுத்தி, உங்களையே தியாகமாக்க வேண்டும். நீங்கள் நீதியின் கனியை அடைய, வேதாகமத்தில் உள்ள வசனங்களுக்கு தேவன்மீதுள்ள நம்பிக்கையோடும், ஆவிக்குரிய விசுவாசத்தோடும் கீழ்ப்படிய வேண்டும். சத்தியத்தின் கனி என்பது பொய்யும் மாறாத மனமும் இல்லாதது. நீங்கள் உங்களுடைய சுயவிருப்பத்தின்படி தெரிந்து கொண்ட நற்குணத்தையும் நீதியையும் மாறாமல் கடைப்பிடித்தால், நீங்கள் சத்தியத்தின் கனியை விளைவிக்க முடியும்.

### ❖ இரண்டாவது தரிசனம், தேவனுடைய இருதயத்தோடு "சகல ஜனங்களையும் இரட்சிப்புக்குள் நடத்தும் சபை" (1தீமோத்தேயு 2:4)

அன்பான தேவன், உலக மக்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டு, நித்திய பரலோகத்திற்குள் நுழைந்து, ஆண்டவருடைய இருதயத்தை அடையப்பெற்று, மிகச் சிறந்த பரலோக வாசஸ்தலமாகிய புதிய எருசலேமில் சூரியனைப் போல ஜொலிக்கக் கூடிய தேவனுடைய பிள்ளைகளாக மாற வேண்டும் என விரும்புகிறார்.

பாவங்களும் தீமையும் மிகவும் பரவலாகியுள்ள இந்த கடைசிக் காலத்தில் தேவன் சகல தேசங்களின் சகல ஜனங்களும் இரட்சிக்கப்பட்டு, கோதுமை போன்ற விசுவாசிகளாய் வளர வேண்டும் என விரும்புகிறார். இதற்காகத்தான் அவர் இந்த சபையை ஏற்படுத்தி இருக்கிறார். எனவே நாம் மேய்ப்பரோடு நம்பிக்கையில் பூரணமாக ஐக்கியப்பட்டவர்களாய் எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்த வேண்டும்.

### ❖ மூன்றாவது தரிசனம், பரிசுத்தமான பிள்ளைகள் நிமித்தமாக "பிதாவின் மகிமையால் நிறைந்த ஆலயம்" (சங்கீதம் 37:6)

தேவன் மகிமைக்கு பாத்திரராக இருக்கிறார். அவருடைய பிரியமான பிள்ளைகள் விசுவாசத்தோடு அவரை மகிமைப்படுத்தும்போது அவர் மகிமையை ஏற்றுக்கொள்கிறார். அவர் அதற்காக பெரிதான ஆசீர்வாதங்களை திரும்பத் தருகிறார்.

ஆவிக்குரிய மற்றும் பூரண ஆவிக்குரிய நபர்களின் எண்ணிக்கை பெருகுவதின்மூலம், இந்தச் சபையில் மகிமையின் ஒளியும் பலமாக இருக்கும். இதனால் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிற மான்மின் சரித்திரம், கானான் ஆலயத்தையும் மிகப் பிரம்மாண்டமான ஆலயத்தையும் கட்டுவதற்கு அனுமதிக்கப்படும். நீங்கள் மிகப் பிரம்மாண்டமான ஆலயத்தின் காலங்களில் மிக முக்கியமான பங்குவகிக்க வேண்டும் என்ற வாஞ்சையான தீர்மானத்தினால் நிறைந்திருக்கிறீர்கள் என நான் நம்புகிறேன்.

### ❖ நான்காவது தரிசனம், தேவனுடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றும் "முடிவில்லா வல்லமை கொண்ட சபை" (சங்கீதம் 62:11)

முடிவில்லா வல்லமை கொண்ட சபை என்பதின் அர்த்தம் முடிவில்லாத தேவனுடைய வல்லமையைப் போன்று இந்தச் சபையும்கூட முடிவில்லாத வல்லமையின் கிரியைகளை வெளிப்படுத்தும் என்பதாகும்.

அதாவது மூன்றாவது உயர்நிலையில் மறுசிருஷ்டிப்பின் வல்லமையை 100% முழுவதுமாக வெளிப்படுத்துகிற கிரியைகளைப் பற்றியது. இந்த வல்லமையின் மூலம், நாம் கற்பனைக்கும் மேலான கனிகளை விளைவிக்க முடியும். தேவன் இந்த பூரணமான மறுசிருஷ்டிப்பின் வல்லமையை அடையும்படிக்கு என்னை நடத்துகிறார். அவர் அதற்காக பெரிதான பொருளாதார ஆசீர்வாதங்களை முன்னமே ஆயத்தம் செய்துள்ளார். அவர் போதகர்கள், பணியாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பூரண ஆவியின் ஓட்டத்தில் இணைந்து, தங்களுடைய விசுவாசத்தை துரிதமாய் அதிகரிக்கும்படி நடத்தியிருக்கிறார்.

2016ம் ஆண்டில், மான்மினானது உலகத்தில் அடிமைத்தனத்தில் இருக்கிற எண்ணற்ற ஆத்துமாக்களை விழித்தெழச் செய்து, அவர்களை இரட்சிப்பு மற்றும் சத்தியத்தின் அறிவுக்கு நேராக நடத்தவுள்ளது. சமுத்திரம் தண்ணீரால் நிறைந்திருக்கிறதுபோல, நாம் 2016 ஆம் ஆண்டில் முடிவில்லாத வல்லமையை வெளிப்படுத்துவோம்; அதனால் தேவனுடைய மகிமை பூமி முழுவதும் நிறைந்திருக்கும்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# பிதா நேசிக்கும் சபை

ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும் (எபேசியர் 5:9)

பிதா நேசிக்கிற திருச்சபை என்பது ஒளியாக இருக்கிற தேவனை பிரதிபலிக்கிற ஒளியின் பிள்ளைகளால் நிறைந்திருக்கிற திருச்சபையாகும். மேலும் இப்பிள்ளைகளால் ஒளியின் கனியை விளைவிக்க முடியும். அப்படியானால் ஒளியின் கனி என்றால் என்ன? ஒளியின் பிள்ளைகளாவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

## 1. ஒளியின் முதற்கனி “சகல நற்குணம்” ஆகும்

அழகான இருதயம் என்பது பொல்லாத உள்நோக்கங்கள் இல்லாத நற்குணத்தின் இருதயம் ஆகும். இப்படிப்பட்ட இருதயத்தை நீங்கள் பண்படுத்தினால் உங்களுக்கு எந்தவொரு கடின உணர்வுகளும் இருக்காது அல்லது யாருக்கு நேராகவும் எந்த ஒரு தீமைகளையும் செய்யமாட்டீர்கள். நீங்கள் வீட்டிலோ அல்லது பணி ஸ்தலத்திலோ நடத்தைக் கெட்ட ரீதியில் நடந்து கொள்ளாமல் உங்களது தனிப்பட்ட ஆதாயம் அல்லது சாதகத்தையோ தேடாமல் உங்களது கடமைகளை நீங்கள் நிறைவேற்றுவீர்கள். நீங்கள் எளியவர்களுக்கு இரக்கமுள்ளவர்களாயிருந்து உங்களைத்தானே நீங்கள் தியாகம் செய்ய வேண்டியிருப்பினும் நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய விரும்புவீர்கள் (மத்தேயு 5:34–42).

நீங்கள் நற்குணத்திற்காக வாஞ்சை கொண்டிருந்தால், நீங்கள் முந்தி அனுபவித்துக் கொண்டிருந்த தீமைகளிலிருந்தும் உங்கள் இருதயத்தின் சத்தியமில்லாதவைகளிலிருந்தும் உங்களை நீங்கள் துண்டித்துக் கொள்வீர்கள். உதாரணமாக, ஆண் அங்கத்தினர்கள் சிலர் குத்துச் சண்டை அல்லது மற்ற வகைகளான சண்டை விளையாட்டுகளை விரும்பியிருப்பீர்கள். விளையாட்டு வீரர்களில் ஒருவர் அடிகள் வாங்கி இரத்தம் சிந்துவதைப் பார்க்கும்போது சில மக்கள் நன்றாக உணர்வர் அல்லது அவர்கள் குத்துச் சண்டை வீரர்களை போதிய அளவு நன்றாக விளையாடவில்லை என்று கூறி சபிப்பர். ஆனால் உண்மையில் நீங்கள் நற்குணத்தை வாஞ்சித்தால், அப்படிப்பட்ட காரியங்களை இப்போது நீங்கள் அனுபவிக்க மாட்டீர்கள் என நான் நம்புகிறேன். நீங்கள் இம்சையையும் கொடூரத்தையும் பார்க்கும்போது, அதைக் குறித்து நீங்கள் நன்றாக உணரமாட்டீர்கள். நீங்கள் அதைக் குறித்து மோசமாககூட உணர்ந்து அப்படிப்பட்ட காரியங்களை விட்டு அகற்றிப் போடுவீர்கள்.

நீங்கள் நற்குணத்தின் கனியை விளைவிப்பதற்கு நீங்கள் தீமையை வெறுப்பது மாத்திரமல்ல, நீங்கள் நற்குணத்தைப் பயிற்சி செய்து உங்களை நீங்களே தியாகம் செய்ய வேண்டும் என்பது உண்மைத்தான். இங்கு முக்கியமானது யாதெனில் வெளிப்பிரகாரமாக நீங்கள் நற்காரியங்களைச் செய்வது மாத்திரமல்ல நீங்கள் உங்கள் இருதயத்திலும் நற்குணத்தை பண்படுத்த வேண்டும்.

உதாரணமாக, ரூத் தன் மாமியாரை மிகுந்த நற்குணத்துடனும் அன்புடனும் சேவித்தாள். அவள், மற்றவர்கள் ‘நான் நல்லவள்’ என்று சொல்வதற்கு முன்னதாக நான் எவ்வளவு தான் தியாகம் செய்ய வேண்டும்? என நினைத்துக் கொண்டு எந்த ஒரு வரம்பான கோடுகளையும் போடவில்லை. அவள் செய்தவற்றை செய்யும்படிக்கு அவள் பலவந்தப்படுத்தப்படவும் இல்லை; உண்மையில், அவள் தனது சேவைக்காக எந்த ஒரு வெகுமதியையோ அல்லது ஆசீர்வாதத்தையோ எதிர்ப்பார்க்கவில்லை. அவள் தன் மாமியாருக்காக கொண்டிருந்த தனது அன்போடு தன் கடமையை நிறைவேற்றுவதற்குத் தன்னைத்தானே தியாகம் செய்வதற்கு தானாகவே முன் வந்தாள்.

நீங்கள் நற்குணத்தில் செயல்படும்போது நீங்கள் உண்மையில் நற்குணத்திற்காக வாஞ்சையோடு இருக்கிறீர்களா அல்லது ஒரு கடமை உணர்விலிருந்து நற்குணத்தைப் பயிற்சிக்கிறீர்களா என்பதை நீங்கள் பரிசோதனை செய்ய வேண்டும். உங்கள் நோக்கங்களை நீங்கள் பகுத்தறிய வேண்டும். உங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து நற்குணத்திற்காக நீங்கள் உண்மையாக வாஞ்சிக்கும்போது நீங்கள் ஒளியின் கனியை விளைவிக்க முடியும்.

## 2. ஒளியின் இரண்டாவது கனி ‘நீதி’ ஆகும்

பொதுவாக, நல்லதொரு காரணத்திற்காக நீதிமான் ஒருவன் தன்னைத்தான் தியாகம் செய்ய முடியும். அது தியாகமாக ஒருவரது வாழ்வையும் கொடுப்பதாகும். நீதியாயிருப்பவர்கள் உத்தமர்களாய் இருப்பார்கள். மேலும் அவர்கள் நேர்மையையும் விசுவாச உத்தமத்தையும் கைவிடமாட்டார்கள். அவர்கள் அநீதியோடு ஒத்துப்போகமாட்டார்கள் அல்லது தங்கள் சுய ஆதாயத்திற்காக அநியாயக் காரர்களோடு இசைந்துப்போக மாட்டார்கள்.

நீதியாயிருக்கிறவர்கள் விசுவாசத்தில் தீவிரமாக வளரவும் முடியும். அவர்கள் எளிமையாக செய், செய்யாதே, கைக்கொள், விட்டுவிலகு என்று குறிப்பிட்ட காரியங்களைக் குறித்து நமக்குச் சொல்கிற தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வர். அவர்கள் தங்கள் கடமையை முக்கியமாக எடுத்துக்கொண்டு அவைகளை விசுவாசத்தன்மையோடு நிறைவேற்றுவர். அவர்கள் அநீதியோடு ஒத்துப்போகாமல் சத்தியத்தைக் காத்துக்கொள்வர். நீதியைப் பற்றிக் கொள்கிறவர்கள் தேவன் அவர்களோடு இருக்கிறார் என்ற ஆதாரத்தைக் கொண்டிருப்பார்கள்.

ஜெபத்தை நிறுத்துவதற்கு புறக்கணித்ததற்காக சிங்கக் கெபிக்குள் தானியேல் போடப்பட்டபோது தேவன் தானியேலை பாதுகாப்பதற்காக சிங்கங்களின் வாய்களை அடைத்தார். கூடவே பிரமாணத்தினால் விலக்கப்பட்ட எந்தவொரு காரியத்தையும் புசிப்பதிலிருந்து விலகியிருப்பதற்கு காய்கறிகளை மட்டும் அவன் சாப்பிட்டபோது, தேவன் அவனில் பிரியங்கொண்டார். அவன் ருசிகரமான ஆகாரங்களைச் சாப்பிட்டவர்களைக் காட்டிலும் மிக சௌந்தர்யமும் ஆரோக்கியமாகவும் இருந்தான். அதற்கும் மேலாக, தேவன் அவனுக்கு ஆச்சர்யமான ஞானத்தையும், வெளிப்பாட்டையும்கூட அவனுக்குக் கொடுத்தார்.

இருப்பினும், இங்கு ஒரு காரியத்தைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும். சத்தியத்தைப் பின்பற்றுவது நல்லது தான், ஆனால் நீங்கள் உங்கள் சுயரீதியான நீதியையும் தோற்றங்களையும் உண்டு பண்ணி விடக்கூடாது. தானியேல் சிறைப்பட்டுப் போனவனாய் இருந்தாலும், அவன் கட்டளைகளை தன் உயிரோடு காத்துக் கொண்டான். ஆனால் அவனைப் போலல்லாது கட்டளைகளைக் கைக்கொள்ள முடியாதிருந்த தன் ஜனங்களை அவன் கீழ்த்தரமாக பார்க்கவோ அல்லது குற்றஞ்சாட்டி ஆக்கினைத் தீர்க்கவோ இல்லை.

நீங்கள் உங்கள் உயிரனைத்தோடும் நீதியைக் கைக்கொண்டாலும்கூட, நீங்கள் ஆணவமாகி மற்றவர்களை குற்றஞ்சாட்டி ஆக்கினைத் தீர்த்தால் அப்போது நீங்கள் வாழ்வின் ஒளியை மற்றவர்களுக்குப் பிரகாசிக்க முடியாது. ஆனால் அதற்கு மாறாக நீங்கள் அவர்களுக்குப் பாரமாகி விடுவீர்கள். நீதியின் கனியை விளைவிப்பதற்கு, நீங்கள் உங்கள் கண்ணோட்டத்தில் நீதியின் தோற்றத்தை வைத்திருக்கக்கூடாது. தேவனுடைய நீதியைக் கொண்டிருக்க வேண்டும். நீதியின் கனி மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசத்தின் அடிப்படையிலே இருக்க வேண்டும் என்பது முக்கியம். நீங்கள் தேவனை நம்பி அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது உங்களுடைய செயல்கள் உங்களுடைய நீதியாகும்.

விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமைக் குறித்து, அவன் தேவன் பேரில் உள்ள தன் விசுவாசத்தினாலே அவன் நீதிமானாக்கப்பட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் சிறு பிராயமுதல் தன்னுடைய முன்னோர்களிடமிருந்து தேவனைக் குறித்துக் கற்றுக்கொண்டான். அதனால் அவனுக்குத் தேவனோடு சரியான அனுபவம் இல்லாதபோதும்கூட, அவனது தகப்பன் வீட்டையும் அவனது வீட்டார் அனைவரையும் விடு என்று அவனிடம் சொன்ன தேவனுடைய கட்டளைக்கு அவன் உடனடியாக கீழ்ப்படிந்தான். அந்த நேரத்திலிருந்து தேவன் பேரில் இருந்த ஆபிரகாமின் நம்பிக்கை அவன் தேவனுடைய கிரியைகளை அனுபவிக்க அனுபவிக்க ஆழமானது. தேவன் அவனுக்கு ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்று சொன்னபோது, ஒரு பிள்ளையை பெறுவதற்கு அவன் மிகுந்த வயது முதிர்ந்தவனாய் இருந்தபோதும்கூட, அவன் தேவனை அப்படியே விசுவாசித்தான். அவன் இந்த வாக்குத்தத்தத்தின் விதையைப் பெற்ற பின்பு தேவன் அவனிடம் அவனை சர்வாங்க தகனபலியாக செலுத்தச் சொன்னார். அவன் அவரை அப்படியே நம்பிக் கீழ்ப்படிந்தான் (எபிரெயர் 11:17–19). தேவன் ஆபிரகாமினிடத்தில் ஈசாக்கை ஆபிரகாம் படைக்க வேண்டும் என ஏன் அவர் சொல்லிக் கொண்டு இருந்தார் என்பதை விளக்கவில்லை. அவன் தேவனைப் பரிபூரணமாக நம்பினானன். அவனது இருதயத்திலிருந்து தேவனுடைய சித்தத்தை அவனால் அறிந்துணர முடிந்தது.

தேவனுடைய பார்வையில் ஆபிரகாம் எத்தனை அருமையானவராக இருந்திருக்கக்கூடும். அப்படிப்பட்ட நம்பத்தகுந்தத்தன்மை ஒரே நாள் இரவிலே ஸ்தாபிக்கப்பட்டதல்ல என்பது உண்மைதான். ஒவ்வொரு முறையும் தேவனுடைய கிரியைகளை அனுபவிக்க அனுபவிக்க ஆபிரகாம் அதை அவன் இருதயத்தில் மீண்டும் மீண்டுமாக வைத்தான். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே அவன் தொடர்ந்து கீழ்படிந்துக் கொண்டே இருந்தான். மேலும் தேவனுடைய சித்தத்தை அதிக ஆழமாக அவன் அறிந்துணர்ந்தான். அவனால் ஆவியின் ஆழமான நிலைக்குள் போக முடிந்தது.

இறுதியாக, அவன் மனிதனுடைய எண்ணங்களால் புரிந்துக்கொள்ளவே முடியாத சூழ்நிலையில் அவன் தனது விசுவாசத்தைக் காண்பிக்க முடிந்தது. இந்த விசுவாசத்தின் நீதியின் மூலமாக, ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பனாகும் ஆசீர்வாதத்தைப் பெற்றான். ஆபிரகாம் மூலமாக, இந்த திருச்சபையின் ஆவிக்குரிய ஓட்டத்திலே அன்பும் நம்பகத்தன்மையும் ஏன் மிக முக்கியம் என்பதை உங்களால் புரிந்துக் கொள்ள முடியும் என நான் நம்புகிறேன். ஆபிரகாமைப் போல பரிபூரண விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் மூலமாக தேவனுடைய ஆழமான சித்தத்தை நீங்கள் புரிந்துக்கொள்ளவும், உங்கள் உயிரனைத்தோடும் கூட சத்தியத்தை பயிற்சி செய்யவும் உங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன்.

## 3. ஒளியின் மூன்றாவது கனி ‘உண்மை’ ஆகும்

உண்மையாய் இருத்தல் என்பது எந்த ஒரு வஞ்சகமோ அல்லது மாறுதலோ இல்லாது இருப்பதாகும். நீங்கள் வாக்கில் சிறிதானதொன்றையாகிலும் உடைக்க மாட்டீர்கள். உங்கள் மனதை ஒரு முறை நிர்ணயித்துவிட்டால், உங்கள் மனதை ஒருபோதும் மாற்றமாட்டீர்கள். நீங்கள் முடிவான விளைவுகளை சீக்கிரம் காணாவிட்டாலும்கூட, நீங்கள் இலக்கை நோக்கி தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். அப்படிப்பட்ட உண்மையுள்ள மக்கள்தான் தேவனாலும் மனிதர்களாலும் நம்பத்தகுந்த பாத்திரமாக அங்கீகரிக்கப்படுவர்.

சில சமயங்களில் செய்திகளால் நீங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், பெரிய காரியங்களை உணர்ந்திருப்பீர்கள். சில காரியங்களை செய்யும்படியாக உங்கள் மனதை நிர்ணயித்திருப்பீர்கள். நீங்கள் பெற்ற கிருபையையும் உங்கள் மனஉறுதியையும் காத்திருந்தாலே நீங்கள் தீவிரமாக விசுவாசத்தின் கன்மலையில் நின்று ஆவிக்குள்ளாக நுழைந்திருப்பீர்கள். நீங்கள் பெற்ற கிருபையை காத்துக் கொள்ளாமல் இருந்தாலும், நீங்கள் உங்கள் மனதை மறுபடியுமாய் நிர்ணயித்து உண்மையான கனியை விளைவிக்கலாம். அப்படிச் செய்யும்போது நீங்கள் நிச்சயமாக ஆவியின் கனியாவீர்கள்.

ஒளியின் கனியை பரிபூரணமாக விளைவிப்பதற்கு, நீங்கள் நற்குணம், நீதி மற்றும் உண்மை ஆகிய அனைத்தையும் உடையவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் நல்லவர்களாய் இருந்தும் நீதியில் குறைவுள்ளவர்களாய் இருந்தால், நீங்கள் பார்ப்பதற்கு பதற்றமுள்ளவர்களாகவும் புத்தியீனர்களாகவும் இருப்பீர்கள். அவிசுவாசிகள் மேலே உண்மையின் ஒளியை உங்களால் வீச முடியாது. மாறாக நீங்கள் அலட்சியப் படுத்தப்படுவீர்கள் அல்லது பூதகரமாக்கப்படுவீர்கள். விசுவாசத்திலும்கூட, உங்களால் மற்றவர்களை ஆவிக்குள் வழிநடத்த இயலாது அல்லது உண்மையில்லாமல் ஜீவனைப் பிறப்பிக்க முடியாது. காரணம், அது ஆவிக்குரிய நற்குணத்தில் விளைந்திருக்காது. மறுகையில், நீங்கள் நீதியாயிருந்து நற்குணத்தில் குறைவாய் இருந்தாலும், அதுவும்கூட நற்கனியாயிராது. உங்களால் மெய்யாக உண்மையின் ஒளியை வீச முடியாது.

ஆக இப்போது, உங்களில் நற்குணம் மற்றும் நீதியின் இசைவு இருந்தாலும்கூட, உங்களில் உண்மையும் இருக்க வேண்டியது கட்டாயம். நீங்கள் ஊக்கமான இருதயத்தோடு ஒரு முறை தீமைகளை களைந்துப் போட்டு கீழ்ப்படிதலில் நீதியை பயிற்சி செய்தாலும்கூட, நீங்கள் மீண்டுமாய் தீமைகளை எடுத்துக்கொண்டு கீழ்ப்படியாமலிருப்பதற்கு தெரிந்துக்கொண்டால், உங்களால் நற்கனியை அறுவடை செய்ய இயலாது.

ஆதாம் ஜீவ ஆத்துமாவாக இருந்தான். அவன் தீமை இல்லாதவனாய் கீழ்ப்படிய மட்டுமே செய்தான். ஆனால், அவன் சுயாதீனத்தோடு கீழ்ப்படியாமையை தெரிந்துகொண்டபோது அவன் மாம்சமாகும்படி கெடுக்கப்பட்டான். ஒளியின் பூரண கனியை பெறுவதற்கு நாம் உண்மையை பண்படுத்த வேண்டும். அதனால் நாம் நம்முடைய சுயாதீனத்தோடு நற்குணத்தையும் நீதியையும் தொடர்ந்து தெரிந்தெடுத்துக் கொண்டே இருக்கலாம்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, சகல நற்குணம், நீதி மற்றும் உண்மையின் பூரண கனியை விளைவித்து தேவனைப் பிரியப்படுத்தும்படியாக உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வதால் நீங்கள் வருகையிலும் போகையிலும் ஆசீர்வாதத்தைப் பெறும்படிக்கு ஆண்டவருடைய நாமத்தில் நான் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# தேவனுடைய ஊக்கமான அன்பு ஜப்பானுக்கு பரவியது



மான்மின் மத்திய திருச்சபை ஏறத்தாழ 10,000 கிளை மற்றும் இணை சபைகளோடு சகல தேசங்களின் சகல ஜனங்களையும் இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தப் பிரயாசப்பட்டு, சிருஷ்டிகராகிய தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் பரப்பியுள்ளது. இப்போது நாம் போதகர் செங்கில் ரியு, இயேசு கிறிஸ்துவின் ஐக்கிய பரிசுத்த திருச்சபையின் தலைவர், ஜப்பான், அவர்களிடமிருந்து ஜப்பானிய பணித்தளத்திற்கு அஸ்திபாரக் கல்லாய் அமைந்த இடா மான்மின் திருச்சபையில் பரிசுத்த ஆவியின் கிரியைகளைக் குறித்து கேட்போம்.

### 1994ல் ஜப்பானில் முதல் கிளை சபை ஸ்தாபிக்கப்பட்டது

நான் ஒரு கம்பெனிக்காக வேலை செய்த ஒரு சாதாரண மனிதன். விடுமுறை சுற்றுலா போவதற்காக ஒரு நாள் நான் ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். அப்போது, "வேதாகமத்துடன் மட்டும் மலை ஜெப வீட்டிற்கு ஏறிப்போ" என்ற ஒரு குரலை நான் கேட்டேன். நான் கீழ்ப்படிந்து மலை ஜெபத்திற்குச் சென்றேன். நான் சரியான கிறிஸ்தவ வாழ்வு நடத்தாததற்காக மனந்திரும்பி நான் உபவாசித்தேன்.

1988ல், நான் இறையியல் பாடசாலையில் இணைந்தேன். பாடசாலையில் எனது நண்பர் ஒருவரால் மான்மின் மத்திய திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டேன். அது ஒரு வெள்ளி முழு இரவு ஆராதனையாக இருந்தது. அது பரிசுத்த ஆவியின் நிறைவோடிருந்தது. குறிப்பாக, அறிவர். ஜேராக் லீ அவர்களது போபு பிரசங்கம் ஆவிக்குரிய ரீதியில் என்னை கவர்ந்தது. ஜூலை 1988ல், நான் திருச்சபையில் பதிவு செய்தேன். இரண்டு வருடங்களுக்குப் பிற்பாடு நான் போதகரானேன்.

1992ல் கொரிய – ஜப்பான் ஐக்கிய படைமுயற்சி கூட்டம் திருச்சபையால் நடத்தப்பட்டது. பரிசுத்த சுவிசேஷத்தைக் கற்றுக்கொண்ட ஜப்பானிய போதகர்கள் தங்கள் தேசத்திற்கு ஒரு மிஷனரியை அனுப்புமாறு திருச்சபையிடம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தனர். அதனால் 1994ல் நான் ஜப்பானில் சேவை செய்யும்படியாக அனுப்பப்பட்டேன். மேலும் நாகானோ பகுதியில் உள்ள இடாவில் நான் திருச்சபையை ஆரம்பித்தேன். நான் பரிசுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தேன்.

### இடா, ஷின்ஷீ, நகோயா படைமுயற்சி கூட்டங்கள் ஜப்பானிய ஊழியத்தைப் பற்றி பிடித்தது

அறிவர். லீ அவர்கள் 1994ல் இடா ஐக்கிய படைமுயற்சி கூட்டத்திற்கும், 1996ல் ஷின்ஷீ ஐக்கிய படை முயற்சி கூட்டத்திற்கும் அழைக்கப்பட்டார். அந்தப் படை முயற்சி கூட்டங்களால் பரிசுத்த சுவிசேஷம் ஜப்பான் முழுவதும் பரவியது. குருடர்கள் பார்வையடைந்தனர்; செவிடர் கேட்டனர்; சிலரது முடங்கிய கால்கள் மற்றும் கைகள் நிமிர்ந்தன. அவர்கள் நடந்து குதிக்க ஆரம்பித்தனர். தங்கள் சொந்த கண்களாலேயே தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை ஜனங்கள் கண்டனர்.

குறிப்பாக, 2000 நகோயா படை முயற்சி கூட்டத்தின்போது அங்கிருந்த 13 செவிட்டு ஊமையர்களில் 7 பேர் கேட்கவும் பேசவும் ஆரம்பித்தனர். கூடுதலாக ஜீவனுள்ள தேவனின் எண்ணற்ற நிரூபணங்கள் ஜப்பானிய ஊழியத்தை உந்தி இயக்கியது.

ஜப்பானிய போதகர்கள் தேவனுடைய வல்லமையான கிரியைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். அந்த படைமுயற்சி கூட்டங்கள் ஜப்பானிய திருச்சபைகளின் வளர்ச்சிக்கு இன்னும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

### கைக்குட்டை ஜெபம் ஊழியத்திற்கு புதிய எல்லையை திறந்தது

ஆனால் குறிப்பிட்ட ஒரு கணப்பொழுதிலிருந்து நான் ஆவிக்குரிய ரீதியில் வரம்புக்குட்பட்டதையும் திருச்சபையின் வளர்ச்சி தேக்கநிலை அடைந்ததையும் உணர்ந்தேன். இதற்காக நான் ஜெபித்துக் கொண்டு இருந்தேன். ஆகஸ்டு 2004ல், உயர்திரு. ஹீசன் லீ, மான்மின் உலகளாவிய வழிநடத்தும் போதகர், கைக்குட்டை படைமுயற்சி பணித்தள பயணமாக ஜப்பான் முழுவதும் பயணித்தார்கள். அது ஜப்பானிய ஊழியத்திற்கு ஒரு புதிய தரிசனத்தை அறிமுகப்படுத்தியது. அறிவர். லீ அவர்கள் ஜெபித்த கைக்குட்டையின் மூலமாக எண்ணற்ற விசுவாசிகள் தங்கள் வியாதிகளிலிருந்து சுகம் பெற்றதை நாங்கள் கண்டோம்.

டிசம்பர் 2004ல், அறிவர். லீ அவர்கள் விசுவாசத்துடன் கைக்குட்டையை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு என்னிடம் சொன்னார். நான் தீவிரமாக முதல் கைக்குட்டை படைமுயற்சி கூட்டத்தை இடா மான்மின் திருச்சபையில் நடத்தினேன். அங்கத்தினர்கள் பலர், தொடர்ச்சியான முதுகு வலி, நரம்பு வலி மற்றும் பல வியாதிகளிலிருந்தும் சுகம் பெற்று ஆவிக்குரிய தைரியம் பெற்றனர்.

2005லிருந்து, ஒவ்வொரு மாதமும் நான் கைக்குட்டை சுகமளிக்கும் படைமுயற்சி கூட்டங்களை நடத்த ஆரம்பித்தேன். திருச்சபை அங்கத்தினர்கள் முற்றிலுமாய் மனந்திரும்பி ஆவி ஆத்துமா ஆகிய இரண்டிலும் உள்ள தங்கள் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகளையும் சரீர சுகத்தையும் பெற்றனர். புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய மண்டலத்தைக் குறித்து கற்றறிந்து கிருபை பெற்று இரட்சிக்கப்பட்டனர். பெலவீனமான விசுவாசமுடையவர்கள் உண்மையான விசுவாசத்தையும், பரலோகத்திற்கான நம்பிக்கையையும் பெற்றனர். தலைவர்கள் அதிக ஊக்கமாக ஒட கிருபையை பெற்றனர்.

கைக்குட்டை படைமுயற்சி கூட்டம் திருச்சபை அங்கத்தினர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், திருச்சபை எழுப்புதலுக்கும் மிகவும் தேவையான ஒன்றாக மாறிவிட்டது.

### ஜப்பானிய மக்கள் தேவனுடைய வல்லமையான கிரியைகளை அனுபவித்தனர்

அறிவர். லீ அவர்களின் ஆராதனைகளில் வியாதியஸ்தர்களுக்கான ஜெபம், தானியங்கி முறையில் பதிலளிக்கும் பதிவு செய்யப்பட்ட அவரது ஜெபம் மற்றும் கைக்குட்டை, ஜப்பானிய ஊழியத்தில் மிக முக்கிய பங்கு வகித்தது.




▲ ஜப்பானிய ஊழியம் : ஜப்பானிய கிளை மற்றும் இணை சபைகள், பரிசுத்த சுவிசேஷம் மற்றும் வல்லமையான கிரியைகளுடன், எண்ணற்ற ஆத்துமாக்களை இரட்சிப்பின் வழிக்கு நேராக வழிநடத்தியுள்ளது

கண்காணியை கனேடா ஷிசுகோ குளிர்ந்த பாதம் மற்றும் கைகளிலிருந்து சுகம் பெற்றாள். கண்காணியை கிட்டாஹாரா அகிக்கோ, ஆஸ்துமா மற்றும் சரும நோய், கண்காணியை ஹாரா சீ இறுகிய தோள்பட்டையிலிருந்தும் சுகம் பெற்றனர். மாடிசுசிமா டேக்கி அறிவர். லீ அவர்களது ARS ஜெபத்தின் மூலமாக கருச்சிதைவிலிருந்து காப்பாற்றப்பட்டுப் பிறந்தான். மேலும் அறிவர். லீ அவர்களது GCN ஜெபத்தின் மூலமாக சரும நோயிலிருந்தும் சுகத்தைப் பெற்றுக்கொண்டான்.

கூடுதலாக, ஹீமோடெயிரா மியாக்கே என்பவர் கண்களில் உள்ள பூஞ்சான் மற்றும் பனி புண் ஆகியவற்றிலிருந்து சுகம் பெற்றார். இங்கு அறிமுகம் செய்வதற்கு எனக்கு அளவுக்கதிகமான சாட்சிகள் உண்டு.

### மேய்ப்பருடைய தியாகம் மற்றும் அர்ப்பணத்திற்கு முன்பாக நான் என்னை சமர்ப்பித்தேன்

இடா மான்மின் திருச்சபை, மான்மின் மத்திய திருச்சபையின் அனைத்து ஆராதனைகளிலும் தானியேல் ஜெபக்கூடுகையிலும் GCN நேரடி ஒளிபரப்பின் மூலமாக இணைந்துக் கொள்ளும். நாங்கள் போதகர்கள் கருத்தரங்கு மற்றும் IT ஊழியம் நடத்துகிறோம். கிறிஸ்தவத்தைக் குறித்து அறிந்திராத ஜப்பானியர்களுக்கு தன்னார்வ சமூகப் பணிகள் மூலமாக சுவிசேஷத்தைப் பரப்புகிறோம்.

ஜப்பானிய ஊழியத்தில் பல காரியங்களை நான் செய்துவிட்டேன் என நினைத்துக் கொண்டிருந்தேன். அறியாமலேயே நான் என் இருதயத்தில் சுயநல நோக்கங்களை வைத்திருந்தேன். இருப்பினும், எதையும் பிரதிபலனாக நோக்காமல் எல்லாவற்றையும் தியாகம் செய்கிற மேய்ப்பரை பார்க்கையில், நான் எனது ஆணவத்தையும் சுயநல நோக்கங்களையும் கண்டறிந்து களைந்துப் போட ஆரம்பித்தேன். நான் எல்லாமே மேய்ப்பருடைய கிருபையினாலே தான் ஆயிற்று என உணரலானேன். என்னாலே அல்ல என்னும் இந்த எண்ண மாற்றம் நான் ஆவியின் இருதயத்தை அடையப்பெற வாய்ப்பாக அமைந்தது.

நான் சுயநல நோக்கங்களையும் ஆணவத்தையும் களைந்துப்போட போட, ஜப்பானிய ஊழியர்கள் ஐக்கியப்பட ஆரம்பித்தனர். மான்மின் பூலோக மாகாணத்திற்கு அஸ்திபாரமாக நாங்கள் அமைவோம் என நம்புகிறேன். நான் புதுப்பிக்கப்படும்படியாக எனக்காக சகித்துக் காத்துக் கொண்டிருந்த தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.




▲ நடுவில், இடா மான்மின் திருச்சபை. இடதிலிருந்து கடிகார திசையில்: நகோயா சுகமளிக்கும் படைமுயற்சி கூட்டத்தில் சாட்சி பகிர்வோர்; இடா மான்மின் திருச்சபை மேலே வட்ட வானவில்; ஷின்ஷீ ஐக்கிய படைமுயற்சி கூட்டம்; இடா மான்மின் திருச்சபை ஆண்டுவிழா ஆராதனை; GCN மூலமாக ஆராதனை; திருச்சபை மாணவர்கள் வெளிப்புற கலைநிகழ்ச்சி தருதல்.

# “என் குடும்பம் பரிசுத்த சுவிசேஷத்தால் புதிப்பிக்கப்பட்டு, இப்போது சந்தோஷமான சிரிப்பால் நிறைந்திருக்கிறது”

மூத்த கண்காணியை இயுன்சுக் கிம்,
வயது 49, 4வது மாகாணம் தென்கொரியா


▲ மூத்த கண்காணியை இயுன்சுக் கிம் தன் குடும்பத்துடன் (இடது, மூப்பர் கில்பர்ட் சே, சகோதரி ஹெயங், வலது சகோதரர் ஜங்சு)

ஒரு மருத்துவராய் என் வாழ்க்கையில் இப்போதுதான் நான் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறேன். என் இதயத்திலிருந்து நோயாளிகளுக்கான அன்பை உணருகிறேன். அவர்களுக்கு உதவியாக நான் இருப்பதற்கு நன்றியை உணர்ந்ததால், ஒவ்வொரு தருணத்தையும் விலையேறப்பெற்றதாக கருதினேன். சில நோயாளிகள் மருந்தினால் முன்னேற்றம் அடையாமல் அல்லது மோசமாகும்போது நான் ஜெபித்தேன்; அப்போது அவர்கள் முன்னேற்றம் காண்பித்தார்கள்; நான் நன்றியை உணர்ந்தேன்.

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், ஞாயிற்றுக்கிழமை மட்டுமே சபைக்குப் போகிறவளாய் இருந்தேன். ஆனால் 1994ல் நான் திருமணம் செய்தபிறகு என் கிறிஸ்தவ வாழ்க்கை மாறியது.

என் கணவர் மூப்பர் கில்பர்ட் சே, WCDNனின் தலைவர் (உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம்) அவர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் *மரணத்திற்கு முன் நித்திய வாழ்வை ருசித்தல்* என்னும் சாட்சிப் புத்தகத்தை எங்கள் திருமணத்திற்கு முன்பு வாசித்தார். அவர் அதிகமான கிருபையை பெற்றுக்கொண்டு, அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களை கேட்க அதிக நேரத்தை செலவிட்டார். என் கணவருக்கு நன்றி செலுத்துகிறேன், காரணம் அவர்நிமித்தமாக நான் ஓய்வுநாளை முழுமையாக ஆசரித்து, சரியான தசமபாகத்தைக் கொடுத்தேன்; அதினால் நான் ஒரு உண்மையான கிறிஸ்தவளாய் மாறினேன்.

மார்ச் 2002ல் என் கணவர் சீயோலில் ஒரு பதவியைப் பெற்றுக்கொண்டார். ஆகவே நாங்கள் சீயோலுக்கு குடிபெயர்ந்து, சீயோலில் உள்ள மான்மின் மத்திய திருச்சபையில் பங்குபெற துவங்கினோம். நாங்கள் பரிசுத்த நற்செய்தியை கேட்டு, வல்லமையான கிரியைகளை பார்த்தபோது இது போன்றதொரு நல்ல சபையில் விசுவாச ஜீவியத்தை வாழ்வது மகிழ்ச்சியானது என்பதை உணர்ந்துக் கொண்டோம். இதற்கிடையில், என் கணவர்மீது அசௌகரிய உணர்வை வெளிப்படுத்த துவங்கினேன், எனக்குத் தெரியாது அது எப்போது ஆரம்பமானது என்று. அவர் செவிலியர்கள், நோயாளிகளிடம் அருமையாகப் பழகுவார். காரணமின்றி நான் பொறாமைப்படத் தொடங்கினேன். அவர் மற்றவர்களிடம் அருமையாக இருக்கிறார், எனக்கோ வீட்டில் எவ்வித உதவியும் செய்வதில்லை என்று நான் குறைகூறி, அசௌகரியமாக உணர்ந்தேன். நான் விரும்புவதை அவர் செய்வதில்லை என்று அவரை நச்சரித்துக் கொண்டே இருந்தேன்.

எப்படியிருந்தாலும், 2011ல், வேகமான ஆவிக்குரிய ஓட்டம் சபையில் ஆரம்பமானது. அறிவர். ஜேராக் லீ ‘கன்மலை விசுவாசத்தில் நிற்பது’ என்ற நிலையைப் பற்றி பிரசங்கித்தார்; ஆவியின் இதயம் முக்கியமானது என்று எடுத்துரைத்தார். என் கணவரும் நானும் புதிதாக்கப்பட வேண்டும் என மனதில் நிர்ணயித்து ஜெபித்தோம்.

அதன்பிறகு, 2014ல் என் கணவர் ஆவியின் இதயத்தை அடையப்பெற்றார்; அவருடைய வார்த்தைகளும், செயல்களும் முற்றிலும் மாறியது. அவர் வீட்டு வேலைகளில் எனக்கு உதவுகிறார். அவர் பாத்திரங்களை கழுவுகிறார்; சோறு சமைக்கிறார்; காபி மற்றும் பழங்களை உணவுக்குப் பின் பரிமாறுகிறார். அவர் என்னைக்காட்டிலும் பத்து மீட்டர் தூரத்திற்கு வேகமாக நடந்துச் சென்றுவிடுவார், ஆனால் தற்போது என் வேகத்திற்கு ஏற்றபடி நடக்கிறார். அவர் சில சமயங்களில் என் பையை தூக்கி வருவார்; எனக்கு மசாஜும் செய்வார். அவர் இதயத்தோடு எனக்கு பணிவிடை செய்தார்.

அவர் காலையில் எங்கள் பிள்ளைகள்மீது கரம் வைத்து ஜெபிக்கிறார். எங்கள் மகனிடத்தில் அருமையான நண்பனைப் போல நடந்துகொள்கிறார். என் குடும்பம் சிரிப்பினாலும், சந்தோஷத்தினாலும் நிறைந்ததாக மாறியது. அவர் புதுப்பிக்கப்பட்டது, பரிசுத்தத்திற்காக வாஞ்சிக்கும்படி என்னையும் மாற்றியது.

நான் மற்றவர்களுக்கு பணிவிடை செய்து, வசனத்தினால் என்னை தரிப்பிக்கவும், ஊக்கமாக ஜெபிக்கவும் துவங்கினேன். நான் என் இதயத்தை விசாலப்படுத்த முயற்சித்தேன். நான் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கவும், இடைவிடாமல் ஜெபிக்கவும், ஆண்டவருடைய கிருபைக்காக நன்றி செலுத்தவும் முயற்சித்தேன். இதற்கிடையில், 2015ல் தேவனுடைய கிருபையால் நானும் கூட ஆவியின் இதயத்தை அடையப்பெற்றேன். அல்லேலூயா!

என்னுடைய பிள்ளைகள் தங்கள் குழுவிலே தலைவர்களாக இருக்கின்றனர். மருத்துவம் மற்றும் அறிவியல் தரவின் அடிப்படையில் தேவனுடைய வல்லமையை நிரூபிக்கும் உலக கிறிஸ்தவர்கள் மருத்துவக் குழுமத்தின் தலைவராக என்னுடைய கணவர் வேலை செய்கிறார். நான் சாலோம் பாடகர் குழுவின் பொது மேலாளராகவும், இரண்டாவது சீன மாகாண குழுவின் பொருளாதார இயக்குனராகவும் இருக்கிறேன். நாங்கள் மிகவும் நன்றியோடு இருக்கிறோம். என்னுடைய குடும்பத்தை புதுப்பித்த தேவனுக்கு நாங்கள் எல்லா நன்றிகளையும், மகிமையையும் செலுத்துகிறோம்.

# “நான் எய்ட்ஸ் நோயினால் மரணத்தின் வாசற்படியில் இருந்தேன்”


சகோதரர் பாம்பாசெலா ஓமர்,
வயது 65, கின்ஷாசா மான்மின் சபை, DR காங்கோ

ஒரு நாளில் நான் பதற்றமாகி, அதிகமாய் இருமத் தொடங்கினேன். மே 2011ல், என் சரீரத்தில் காயம்பட்டது; காயத்திலிருந்து இரத்தம் வந்தது, சில புள்ளிகளும் தோன்றியது. அது புதுமையானதாக இருந்ததால் நான் மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்தேன். எனக்கு சில மருந்துகள் கொடுக்கப்பட்டது.

என்னிடம் மருத்துவர் அந்த மருந்துகளின் எதிர்வினை எனக்கு இருக்கும் வியாதியை இனங்காட்டி விடும் என்று கூறினார். மேலும் ஒரு வாரம் கழித்து என்னை வரும்படி கூறினார். நான் மருந்துகளை எடுத்துகொண்ட பிறகு வாந்தி எடுத்தேன்; சோர்வை உணர்ந்தேன். நான் மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றபோது மருத்துவர் என்னிடம் வேறு ஒரு மருந்தை கொடுத்து விட்டு இரண்டு மாதங்கள் கழித்து மறுபடியும் வரும்படி கூறினார்.

நான் பெலவீனமடைந்தேன், நன்றாக நடக்கவோ சாப்பிடவோ முடியவில்லை. இரண்டு மாதங்களுக்குப் பிறகு என்னுடைய மகன் மருத்துவனைக்குச் சென்று எனக்கு எய்ட்ஸ் இருப்பதையும், சீக்கிரத்தில் மரித்து விடுவேன் என்பதையும் அறிந்து வந்தான்.

எந்த ஒரு சிகிச்சையும் எடுக்க முடியாமல் மரணத்திற்காக காத்திருப்பதை மட்டுமே என்னால் செய்யமுடியும் என்பதால் நான் வேதனையை உணர்ந்தேன். மங்கிய நம்பிக்கையோடு என் வீட்டிற்கு அருகாமையில் இருக்கும் சபையின் போதகரிடம் எனக்காக ஜெபிக்கும்படி வேண்டிக் கொண்டேன். ஆனால் என் நிலைமையில் எவ்வித முன்னேற்றமோ மாற்றமோ ஏற்படவில்லை.

நான் இப்படிப்பட்ட மனச்சோர்வின் குழியில் இருந்தபோது, கின்ஷாசா மான்மின் சபையில் பங்குப்பெற்றுக் கொண்டிருந்த என்னுடைய உறவினர் ஒருவர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் *மரணத்திற்கு முன் நித்திய வாழ்வை ருசித்தல், சிலுவையின் செய்தி*, மற்றும் *விசுவாசத்தின் அளவு* ஆகிய புத்தகங்களை எனக்குக் கொடுத்தார். அந்தப் புத்தகங்களை வாசிக்கையில் என் இதயத்திற்குள் ஒரு நம்பிக்கையின் பேரொளி வந்தது.

2014 அக்டோபர் மாதத் துவக்கம் முதல் நான் கின்ஷாசா மான்மின் சபையில் பங்குப்பெற தொடங்கினேன். போதகர் ஜேக்கப் லீயின் மூலமாக அறிவர். லீ அவர்கள்மூலம் வெளிப்படுகிற தேவனுடைய வல்லமையை குறித்து நான் கேள்விப்பட்டேன். தேவனை நான் சார்ந்துகொண்டால் என்னால் குணமாக முடியும் என்ற உறுதியை அடைந்தேன்.

அதுமுதற்கொண்டு நான் மருந்துகளை எடுத்துக்கொள்வதை நிறுத்தினேன்; ஒவ்வொரு ஆராதனைகளிலும், தானியேல் ஜெபக்கூட்டத்திலும் பங்கு பெற்றேன்; அங்கு நான் பெலப்படுத்தப்பட்டேன். நான் எனக்குள் ஏதோ இயற்கைக்கு மிஞ்சிய செயல்பாட்டை உணர்ந்தேன். நான் பரிபூரணமான சுகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டின் மான்மின் கோடை சுற்றுலாமுகாமின் பதிவு செய்யப்பட்ட காட்சியை GCN வழியாகப் பார்த்து, அறிவர். லீ அவர்களின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றுக் கொண்டேன்.

பிறகு, பரிசுத்த ஆவியின் அக்கினி என் சரீரத்தை சுட்டெரித்தது. அந்த தருணத்தில், என் கால்களில் இருந்த கடுமையான வலி நீங்கி, என் சரீரம் இலகுவானதை நான் உணர்ந்தேன். எனக்கு எவ்வித மயக்கமும் இல்லை, என் சரீரத்தை சுலபமாக அசைக்க முடிந்தது. அதன்பிறகு புள்ளிகளும், காயங்களும் மறைந்துப் போனது. நான் பெரிய முன்னேற்றமடைந்து, நல்ல ஆரோக்கியத்தை திரும்பப் பெற்றேன். அல்லேலூயா!

GCN
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com